100க்கும் மேற்பட்ட புரவலர்கள் உதவிவருகின்றனர், 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். இளம் வயதில் "முகவரி" என்ற அமைப்பை உருவாக்கி எழுச்சிமிகு மாணவர்களை உருவாக்கி வரும் "முகவரி **ரமேஷ்**" உடனான நேர்காணல்...

# பிரச்சினைகளின் மூலமே புதிய பரிமாணங்களை எட்டுகிறேன்



## முகவரி ரமேஷ்

நேர்காணல்



கனகலட்சுமி

MUGAVARI
FOUNDATION Gratitude is Life

## அறிமுகம்

***(பேச்சை துவங்கும் முன்னே... தன்னுடைய தனிப்பட்ட புகைப்படத்தை மட்டும் எங்கும் வெளியிட வேண்டாம். இது ஒரு கூட்டுமுயற்சியாக நிறுவப்பட வேண்டும் என்ற அன்பான வேண்டுகோளுடன் பேசத் துவங்குகிறார்.)***

*என் பெயர் ரமேஷ். முகவரி அறக்கட்டளையின் நிறுவனர். அம்மா பெயர் பட்டத்தாள். அப்பா பெயர் குப்புடையார். என்னுடன் பிறந்தவர்கள் இரண்டு பேர். நாங்கள் விவசாயக்கூலிகள். சேலம் மாவட்டம் ஆத்தூர் தாலுக்கா சின்ன குக்கிராமம் எங்களுடையது. 300 குடும்பங்கள்தான் இருக்கும். நாமக்கல் கலை அறிவியல் கல்லூரியில் பி.எஸ்.சி. கணிதம் படித்தேன். சி.ஏ. படிக்கத் துவங்கினேன். சி.ஏ. தேர்வுக்குத் தயாராகிக்கொண்டிருந்தேன். என் வாழ்க்கையின் அடித்தளத்தை அமைத்துக் கொண்டிருந்த காலம். ஒரு பெண்ணின் கல்விக்கு உதவி செய்த காரணத்தினால் உதவி கேட்டு வரும் பல மாணவர்களிடம் என்னால் மறுப்பு சொல்ல முடியவில்லை. அந்த சமயத்தில் ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் எதுவும் எனக்கு கிடையாது. அதே சமயத்தில் உதவவில்லை என்றால் அவர்களின் எதிர்காலம் வீணாகிவிடுமே என்பதால் அவர்களுக்கான உதவி தேடி ஓட ஆரம்பித்தேன். தொடர்ந்து இதற்காக நான் மேற்கொண்ட முயற்சியில் என் சி.ஏ. கனவு தடைபெற்றது. பொருளாதார நெருக்கடிகளும் சேர்ந்து கொண்டன. ஆடிட்டர் அலுவலகத்தில் கொஞ்சம் வேலை செய்தேன். இப்போது முகவரிதான் முழு நேர வேலை.*

**போராட்டம் மிகுந்த சூழலில் ஓர் அமைப்பை உருவாக்கி இருக்கிறீர்கள். அந்தச் சூழல் குறித்தும் உங்கள் இளமைப்பருவம் குறித்தும் சொல்லுங்கள்.**

*நானும் தம்பியும் இரட்டைக் குழந்தைகள். அக்கா எங்களை விட 12 ஆண்டுகள் மூத்தவர். ராமன் லஷ்மணன் என்றுதான் பெயர் வைத்தார்கள். எங்களை வித்தியாசம் காணவே முடியாது. என் வலது கையில் இருக்கும் ஒரு மச்சத்தைக் கொண்டு தான் அடையாளமே காண்பார்கள். என் அப்பா அவருக்கென இருந்த இடத்தை விற்று எங்கள் தாய் மாமாவை படிக்க வைத்தார். அந்த நிலத்தை மீட்க முடியாததால் எங்கள் பெற்றோர் சென்னைக்குக் கட்டிடத் தொழிலாளர் வேலைக்குச் செல்ல நேர்ந்தது. நாங்கள் பிறந்தபோதே எங்களோடு சேர்ந்து பிறந்தது வறுமை. நானும் என் தம்பியும் பெற்றோருடனிருந்து வளரவில்லை. எங்களை வளர்த்தது என் அக்கா, சின்னம்மா, மற்றும் தாத்தா பாட்டி. அவ்வப்போது பண்டிகை காலங்களில் விடுமுறை என்றால் மட்டும் என் பெற்றோர் வருவார்கள் எங்களைப் பள்ளியில் சேர்ப்பதற்காக அக்கா அழைத்து கொண்டு போனார். பள்ளியில் என் பெயரை பதிவிடும் போது என் அக்கா ஏனோ ராமர் என்ற பெயருக்குப் பதிலாக ரமேஷ் என மாற்றிக் கொடுத்துவிட்டார்.*

*நாங்கள் ஒரே மாதிரியிருந்ததால், நாங்கள் இருவரும் ஒரே வகுப்பில் இருந்தது பெரும் பிரச்சினையாக இருந்தது. அதனால் எங்கள் வகுப்பு ஆசிரியர் ஒருவர் ஒன்றாம் வகுப்பிலும், மற்றொருவரை இரண்டாம் வகுப்புக்கும் அனுப்பி விடுவது என முடிவு செய்தார். அப்போது என் தம்பிக்கு இரண்டாம் வகுப்பு செல்ல வேண்டும் என்று ஆசை. அதற்கு நான் ஒப்புக் கொண்டு என் தம்பி இரண்டாம் வகுப்பு செல்ல சம்மதித்தேனாம். எனக்கு அப்போதே விட்டுக்கொடுக்கும் தன்மையிருந்ததாக எங்கள் வீட்டில் இருப்பவர்கள் சொல்வார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் அன்று விவரம் தெரியாமல் நான் விட்டுக்கொடுத்த அந்தப் பண்பினால் பின்னாளில் அவன் எனக்கு முக்கியமான தருணம் ஒன்றை விட்டுக்கொடுத்தான். எங்கள் வறுமையின் காரணமாக யாராவது ஒருவரைத் தான் கல்லூரியில் படிக்க வைக்கக்கூடிய சூழல், அப்போது என் தம்பி "நான் வேலைக்குப் போகிறேன். நீ படி" என்று எனக்கு விட்டுக்கொடுத்தான்.*

*கல்லூரி படிக்கையில் ஒரு சுமாரான மாணவனாகத்தான் இருந்தேன். நாங்கள் பள்ளியில் படித்த போதும் வறுமையில்தான் இருந்தோம். ஐந்து கி.மீ. நடந்து நடந்து தான் படித்தோம். பள்ளிக்குப் போட்டுக்கொண்டு போக சட்டையும் கால் சட்டையும்*

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

"இதுவரை பாமரர்கள் என்றழைக்கப் பட்டவர்கள் எழுதப் படிக்கத் தெரியாத வர்கள். இனிமேல் அவர்கள் பாமரர்கள் இல்லை" என்றார் ஆல்வின் டாஃப்ளர். அவரது நண்பர் மென்கின்சன், இடைமறித்து, "அப்படியானால் யார் பாமரர்கள்?" என்றார். ஆல்வின் சொன்னார், "இருபத்தோராம் நூற்றாண்டைப் பொறுத்தவரை, கற்றுக் கொள்வது – கற்றுக் கொண்டதை முற்றும் மறப்பது – மறுபடியும் கற்றுக் கொள்வது – இந்த மூன்றும் யாருக்கு சாத்திய மில்லையோ அவர்களே பாமரர்கள்."



கிடையாது. அறிவியல் ஆய்வுக்கூடங்களுக்கு காலில் காலணி இல்லாமல் உள்ளே அனுமதிக்க மாட்டார்கள். அப்போது மற்ற குரூப் மாணவர்களிடம் காலணியை கடன் வாங்கிப் போட்டுவிட்டு அந்த வகுப்பு முடிந்ததும் திரும்பக் கொடுப்போம். என் தம்பி பன்னிரண்டாம் வகுப்பு நான் பதினோராம் வகுப்பு படிக்கிறபோதெல்லாம் எங்களுக்கு ஒரே ஒரு சீருடைதான் இருந்தது. அவனுக்கு காலையில் தேர்வு. எனக்கு மதியம் தேர்வு. அவன் தேர்வு எழுதி வந்து சீருடையை கொடுத்தால் அதையே அணிந்துகொண்டு நான் மதியம் சென்று தேர்வு எழுதுவேன். இது மாதிரியாகத்தான் எங்கள் பள்ளி வாழ்க்கை கழிந்தது.

கல்லூரியில் சேர முதல் நாள் என் நண்பன் பாண்டுரங்கன் எனக்கு அவனுடைய கால் சட்டையைக் கடனாகக் கொடுத்தான். ராஜேந்திரன் அண்ணா எனக்கு அவர் சட்டையைக் கொடுத்தார். அவற்றை அணிந்துகொண்டு முதல் நாள் கல்லூரிக்குச் சென்றேன். அதன் பின் கல்லூரி ஆரம்பித்து இருபது நாட்கள் வரை நான் சொல்லவேயில்லை. என் அப்பா எங்கோ சென்று கல்லுடைத்து எனக்கான துணிகளை வாங்கி வந்தார். அதன் பின், அவற்றை அணிந்துகொண்டு தான் கல்லூரிக்குச்சென்றேன். அதே கல்லூரியிலிருந்து நான் வெளியே வருகையில் சிறந்த மாணவன், முதல் மாணவன் என்ற பெருமிதத்துடன் வெளியே வந்தேன். எந்த வறுமையும் என் படிப்புக்கோ, உழைக்க வேண்டும் என்ற என் முனைப்பிற்கோ தடையாக இருக்க வில்லை.

நான் கல்லூரியின் சிறந்த மாணவன் விருது, முன்னாள் மாணவர் சங்கத்தின் விருது, எங்கள் துறையின் முதல் மாணவன் விருது என எல்லா வற்றையும் வாங்கி வெளியேறுகிற வேளையில் என துருதிர்ஷ்டம் ஒரே ஒரு பாடத்தில் நான் தோல்வியடைந்ததாக எதிர்பாராத முடிவு வந்தது. இது எனக்கு பெரும் அதிர்ச்சியாக இருந்தது. இப்போதிருப்பது போல் உடனே மறுகூட்டல் செய்யும் வசதி அப்போது இல்லை. மறு கூட்டலுக்கு விண்ணப்பித்துவிட்டு காத்திருந்தேன். பல முன்னணி பல்கலைக்கழகங்களிலிருந்தும் எனக்கு முதுநிலைப் படிப்புக்கு இடம்கிடைத்தும் என்னால் சேர முடியாத சூழல், என்னோடு சேர்ந்து படித்த மாணவர்கள் எல்லாம் மேல்படிப்புக்கு சேர்ந்துவிட்டார்கள். என்னால் எங்கும் தொடர முடியவில்லை. மேலும் பல விமர்சனங்களுக்கும் கேலி கிண்டல்களுக்கும் ஆளானேன். கல்லூரியின் சிறந்த மாணவன் விருது வாங்கியவனே தேர்வில் தோற்றுவிட்டான் என விமர்சித்தார்கள். இது எனக்கு பெரும் மனவலியாக இருந்தது. வீட்டிற்கும் செல்ல முடியாத சூழ்நிலை. அந்த ஆறு மாத காலமும் ஊருக்குத் திரும்பக்கூட வசதியின்றி ஹாஸ்டலிலேயே தங்கியிருந்தேன்.

எங்களுக்கு இத்தனை வறுமை வரக் காரணம் என் அக்காவிற்கு இதய நோய் இருந்தது. அதனால் என் பெற்றோர் ஈட்டுகிற வருமானம் அனைத்தும் அக்காவின் மருத்துவ செலவிற்கே சரியாய் போனது. இந்தப் பிரச்சினைக்கு நடுவே என் மறுகூட்டல் மதிப்பெண் வந்தது, முதலில் நான் வாங்கியிருந்தது 26 மதிப்பெண்கள், மறுகூட்டலுக்குப் பின் 78 மதிப்பெண்கள் போட்டு என்னை தேர்ச்சி பெற செய்திருந்தார்கள். இதனால் அந்த ஒரு வருடம் நான் சந்தித்த சிரமங்கள் ஏராளம். இந்த சமயத்தில் என் அக்காவிற்கு இதயநோய் மிக கடுமையானது. 76 மதிப்பெண்களை மறக்க முடியாது காரணம். சரியாக 76 நாட்கள் என் அக்காவோடு நான் அரசு பொது மருத்துவமனையில் இருந்தேன். அந்த தருணத்தில் அறுவை சிசிச்சை தோல்வியடைந்து என் அக்கா காலமானார்.

அப்போது மருத்துவமனையில் நான் கவனித்த ஒன்று, சில நோயாளிகள் வருவார்கள். சில முக்கியப் பிரமுகர்களின் பரிந்துரையில் உடனடியாக அவர்களுக்கு சிகிச்சை நடைபெறும். ஆனால் நாங்கள் சாமானிய மனிதர்களாக இருந்ததாலேயோ என்னவோ எங்களுக்கு சிகிச்சை தாமதப்பட்டு போனதாக நான் கருதுகிறேன். எங்கள் குடும்பத்திலோ அல்லது சுற்றத்திலோ ஒரு மருத்துவரோ அல்லது பரிந்துரைக்கக் கூடியவர் களோ இருந்திருந்தால் என் அக்கா காப்பாற்றப் பட்டிருக்கலாம் என்பது என் கருத்து.

**சிரமங்கள் நிறைந்த உங்கள் இளமை காலத்திற் கிடையே பிறருக்கு உதவ வேண்டும் என்ற விதை உங்களுக்குள் எப்போது விழுந்தது?**






அப்போது நான் சி.ஏ. படித்து கொண்டிருக்கி றேன். அப்போது எங்கள் சுற்றத்தில் ஒரு பெண் பத்தாம் வகுப்பில் நல்ல மதிப்பெண் எடுத்து தேறியிருந்தாள். அவளை மேலும் படிக்க வைக்க குடும்பத்தாரால் இயலவில்லை. அப்போது அப்பெண் எடுத்த மதிப்பெண்ணைக் கருத்தில் கொண்டு நானே அவளை ஒரு தனியார் பள்ளியில் சேர்த்துவிட்டேன். அப்போது மிக யதார்த்தமாக விழிப்புணர்வேயின்றி ஒரு வார்த்தையை அவளிடம் சொல்லியிருக்கிறேன், ‘‘நல்ல மதிப்பெண் எடுத்திருக்க. இனியும் நல்ல மதிப்பெண் எடுத்தா உன்ன டாக்டர் ஆக்கிடலாம்.” அந்தப் பெண் பன்னிரண்டாம் வகுப்பில் 1136 மதிப்பெண்கள் எடுத்து தேறினாள்.

நான் அவளை டாக்டர் ஆக்குவதாக சொன்ன வார்த்தைகளே எனக்கு நினைவிலில்லை. அவள் இந்த மதிப்பெண்கள் எடுத்து என் முன் வந்த போது “நல்ல மதிப்பெண்ணா இருக்கே. டீச்சர் டிரெயினிங் போயேன்” என்றேன். அதற்கு அந்த பெண், “என்னண்ணா? நல்ல மதிப்பெண் எடுத்தா டாக்டர் ஆக்கறேன்னு சொன்னீங்களே?’ என்றாள். எனக்கு சுளீரென அறைந்தாற் போல் இருந்தது. நான் யதார்த்தமாகச் சொன்ன வார்த்தைகளை உண்மையென நம்பி உழைத்துப் படித்த அந்தப் பெண்ணை ஏமாற்றக்கூடாது என்ற முனைப்பு வந்தது. மேலும் என் அக்காவின் மரணம் எனக்கு ஒரு டாக்டரை உருவாக்கப் பெரும் தாக்கமாக அமைந்திருந்தது. எல்லாமுமாக இணைந்து, அப்பெண்ணை டாக்டராக்குவது என முடிவு செய்தேன்.

என் பெற்றோருக்கு இயல்பிலேயே உதவும் மனப்பான்மை அதிகம். அதைப் பார்த்துப்பார்த்தே வளர்ந்தேன். நாங்கள் வாழ்ந்தது குக்கிராமம் என்பதால் அங்கே ஒரு வீட்டாருக்கும் மற்றொருவருக்கும் நிதமும் சண்டைகள் வரும். அதை யாருமே பொருட்படுத்தாத வேளையில் என் அம்மா முன் நின்று தீர்த்து வைப்பார்கள். இதனால் பல வசைகள் வந்து சேரும். எதையும் பொருட் படுத்தமாட்டார். அக்கம் பக்கத்தினர் நன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே அவருக்கு இருக்கும். அதே போல் என் அப்பா.

Shibi

தன்னுடைய சொத்தை விற்று என் மாமாவை படிக்க வைத்தார். அவர்தான் அக்கிராமத்தின் முதல் பட்டதாரி. என் தந்தை வறுமையால் அவதியுற்றபோது அவரிடம் இருந்து எந்த உதவிகளும் வரவில்லை. அப்போது அப்பா சொல்வார், “படிக்க வைக்கத்தானே காட்டை வித்தோம். படிச்சான்னல்ல; அதுபோதும்.” எனவே பிறருக்கு உதவ வேண்டும் என்ற விதை அல்லது எண்ணம் வருவதற்கு என் வாழ்வில் பெரும் அற்புதங்கள் எதுவும் நிகழவில்லை. நான் வளர்ந்த சூழலில் நான் சந்தித்த மனிதர்கள் இயல்பாகவே உதவும் குணம் படைத்தவர்களாக இருந்தார்கள். அது என்னுள் ஆழமாக இறங்கிவிட்டது.

**வசதிகள் நிறைந்த பின்புலம் ஏதுமில்லாத சூழலில், ஓர் அமைப்பை முன்னெடுத்துச் செல்கிறீர்கள். அதிலிருந்து பின்வாங்கும் எண்ணம் எப்போதாவது தோன்றியதா? அப்படியிருந்தால் அதை எப்படி எதிர் கொண்டீர்கள்?**

நான் வேளச்சேரி தண்டீஸ்வரத்தில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து தங்கி இருந்தோம். முகவரியை நம்பி மாணவர்கள் பலர் வந்தபோதும் அனைவருக்கும் உதவி பெற்றுத்தர முடியாத நிலை. நாங்கள் தங்கியிருந்த வீட்டுக்கு வாடகை கொடுக்க முடியாத அளவுக்கு பொருளாதார நெருக்கடி. எனக்கென எதுவும் செய்து கொள்ளாததால் என்னுடைய குடும்பத்திலும் எனக்கு பிரச்சினை. இந்த நெருக்கடிகளின் உச்சத்தைச் சமாளிக்க முடியாமல் தவித்தேன். இதை முகவரி மாணவன் வெற்றிவேலிடம் சொன்னேன்.

அதற்கு வெற்றிவேல், ‘‘உங்களுடைய இயல்புக்கு முகவரியே சரியாக இருக்கும். சி.ஏ. படிக்கவும் அந்தத் தொழிலைச் செய்யவும் நிறைய பேர் வருவார்கள். ஆனால் இந்தச் செயல் செய்ய உங்களைப் போன்றவர்களால்தான் முடியும். இதனால் நிறைய மாணவர்கள் பயனடைவார்கள் தயவு செய்து முகவரியை விட்டுவிடாதீர்கள்” என்று கூறினார். நான் அந்த வார்த்தைகளை ஏற்றுக் கொண்டேன்.

வெற்றிவேல் யோசனை சொன்னதோடு மட்டுமல்லாமல், எல்லா செயல்களையும் முன் நின்று செய்து, முகவரி இன்று சரியான பாதையில் செல்வதற்குக்காரணமே அவர்தான். அவருடன் அவர் மூலம் முகவரிக்கு வந்த பூபதிராஜாவும் உறு துணையாக உள்ளார். இவர்கள் இருவரும் முகவரியின் இரு கண்கள்.

**கல்வி சார்ந்த பணிகளை மட்டும் செய்கிறீர்களே? கல்வி குறித்து உங்களின் பார்வை என்ன?**

# நீங்கள் மந்தையில் ஒருவரா? மேய்ப்பரா?



எல்லாவற்றையும் சரியென்று ஏய்ப்பவர்கள் சராசரிகள். வெளியில்கூட அப்புறம் பார்க்கலாம். வீட்டிலும், வேலை செய்யும் இடத்திலும் ஏற்படுகின்ற குறைகளை, "எல்லாம் அப்படித்தான் இருக்கும்" என்று தாண்டிப்போனால் நீங்கள் மந்தையில் ஒருவர்.

சிறுமைகளைக் கண்டு சீறமுடியா விட்டாலும் இது சிறுமை என்று சுட்டு விரல் நீட்டினால் நீங்கள் மேய்ப்பனாகக் கூடிய தலைவர்.

தயக்கங்களை தகர்த்தவர்களும், தலைகுனிந்து குட்டுகளை ஏற்பதைத் தவிர்த்தவர்களுமே தலையெடுத்து கிறார்கள். தலைவர்களாய் மலர்ந்திருக்கி றார்கள்.

உலகிலுள்ள ரசங்களிலேயே உப்பு சப்பு இல்லாத ரசம் சமரசம்தான். ஆனால் ஒரு குறையை சுட்டிக்காட்டினால் மட்டுமே தலைவராகி விடமுடியுமா? இதுவும் நல்ல கேள்விதான்.

எது நமக்குக் குறையென்று படுகிறதோ, அதற்கு மாற்றாகவும் தீர்வாகவும் நல்ல சிந்தனையை, செயல் திட்டத்தைச் சொன்னால்தான் உங்களுக்குள் இருக்கும் தலைவர் முழுமை பெறுவார்.



நல்ல கேள்வி. கல்வி சார்ந்தது மட்டுமே உதவுவது என்பது நானாக தேர்ந்தெடுத்த ஒன்றல்ல எனக்கு அமைந்துவிட்ட ஒன்று. நான் முன்பு கூறியது போல் நான் முதன்முதலில் உதவிய அந்த மாணவி மருத்துவம் படிக்க வேண்டும் என்று என்னை அணுகிய சமயம், ரமணா திரைப்படம் வெளிவந்திருந்தது. எனக்குள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய திரைப்படம் அது. எனவே அத்திரைப்படத்தை எடுத்த இயக்குனர் திரு.முருகதாஸ் இதற்கு உதவுவார் என்ற நம்பிக்கையில் அவரைச் சந்தித்தேன். அவரின் உதவியும் பெற்றேன். அப்பெண் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் பயில இடம் கிடைத்தது. அந்த சம்பவம் எங்கள் பகுதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. படிப்பதற்கான எந்த வசதியும் இல்லாத வேளையில் அப்பெண் மருத்துவம் படித்தது அனைவரையும் கல்வியை நோக்கி ஈர்த்தது. எனவே கல்வி குறித்த சந்தேகங்கள், உதவிகள் என கல்வி சார்ந்த உதவிகளுக்கு எங்கள் பகுதி மக்கள் என்னை அணுக ஆரம்பித்தனர்.

எனக்கும் இயல்பாக அமைந்த இந்தப் பயணம் சரி என்று ஒரு இடத்தில் தீர்க்கமாக எண்ணினேன். காரணம், கல்வி ஒரு மனிதனை விசாலப்படுத்தும். ஒருவரிடம் நல்ல புரிதலை ஏற்படுத்தும். தாகத்திற்கு தண்ணீர் கொடுத்தாலும் மனிதநேயம்தான். பிறர் நன்றாக இருக்க வேண்டும் என்று கருதினாலும் மனிதநேயம்தான். இயற்கைக்கு விரோதமில்லாமல் இருப்பதும் மனிதநேயம்தான். நாம பெரிதாக எந்த தியாகமும், சேவையும் செய்ய வேண்டிய அவசியமில்லை. இயற்கைக்கு விரோதமில்லாமல் இருப்பதே பெரும் சேவை. ஆனால் அதையும் தாண்டி கடவுள் எனக்குக் கல்வி என்ற அழகான களத்தை ஏற்படுத்திக் கொடுத்திருந்தார். அதை மட்டுமே செவ்வனே செய்ய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. எனவே என் உள்ளுணர்வின் குரலுக்கு இசைந்து எனக்கு அமைந்த களத்தில் மேலும் செம்மையாகச் செயல்படுகிறேன்.

மேலும் சிரமங்களைக் கடந்து. படித்து ஒரு தலைமைப் பொறுப்பை ஏற்கிற மாணவர்களால், தொழில் முன்னோடியாக வளர்கிற மாணவர்களால் நிறைய மாற்றங்களை ஏற்படுத்த முடியும். நல்ல குணங்கள், நல்ல தன்மைகள், சிறந்த ஒழுக்கம் என அனைத்தும் சரியாக அமைந்த மாணவருக்கு கல்வி என்கிற அற்புதத்தை ஏற்படுத்திக் கொடுத்தால், அதைக் கொண்டு விளைகிற வருங்காலம் சிறப்புடையதாக இருக்கும் என்பது என் நம்பிக்கை. சரியான கல்வி, சரியான நபருக்கு கிடைத்தால் பெரும் மாற்றம் நிகழும் என்பதுதான் கல்வி குறித்தும், கல்வி சார்ந்து நான் செய்து வருகிற பணி குறித்தும் நான் கொண்டிருக்கும் புரிதல்.

**லாப நோக்கமற்ற நிறுவனமொன்றை நடத்தி வருகிறீர்கள். இது விமர்சனங்களால் நிறைந்திருக்கும் துறை. சவால் மிகுந்த தருணங்களை எப்படி எதிர் கொள்கிறிர்கள்?**

விமர்சனம் என்பது பார்க்கும் பார்வையை பொறுத்து, நான் ஒன்றை துவங்குகிறபோது கேலியில் கிண்டலில் ஆரம்பிக்கிற விமர்சனம், நான் அந்தச் செயலை வெற்றிகரமாகச் செய்து முடிக்கையில் பொறாமையில், ஆற்றாமையில் முடிகிறது. ஆக விமர்சனங்கள் இருந்தே யிருக்கின்றன. முன்பு சொன்னது போல் பார்க்கும் பார்வைதான் வேறு. ஒரே விஷயத்தை நானொரு மாதிரியும் மற்றொருவர் வேறொரு கோணத்திலும் பார்க்கலாம். விமர்சிக்கிறவர்கள் அவர்கள் பெற்றிருக்கக்கூடிய அறிவுக்கு உட்பட்டு பார்க்கிறார்கள். விமர்சனத்தை சந்திக்கின்ற நான் என் அறிவுக்கு உட்பட்டு அதை எதிர்கொள்கிறேன். இன்று பெரும் மேதைகளாக கொண்டாடப் படுகிறவர்கள் ஒரு காலத்தில் கல்லால் அடித்து கொல்லப்பட்டார்கள் ஒரு காலத்தில் கல்லால் அடித்து கொள்ளப்பட்டார்கள் என்று வரலாறு சொல்கிறது. இது தான் இயல்பு, செல்கிற பாதையில் தெளிவிருந்தால், நாம் செய்ய வேண்டிய செயல்களின் மீது தீர்கமான நம்பிக்கையிருந்தால் விமர்சனங்களை புறம்தாள்ளி முன்னோக்கி சென்று கொண்டேயிருக்கலாம். வெற்றியை நாம் சந்திக்கிற வேளையில் நம்மை விமர்சித்தவர்கள் தன்னை தானே விமர்சித்துக்கொள்வார்கள், அவர்கள் கூறிய கருத்துகள் தவறு என்று.




இந்த விமர்சனங்களும், நம்மை துவளச் செய்கிற பேச்சுகளும் என்னை தொந்தரவு செய்யாமல் இல்லை. நானும் ஒரு சாதாரண மனிதன் என்பதுதானே யதார்த்தம். நான் உதவிய மாணவர்களே என்னை விமர்சித்திருக்கிறார்கள். ஆனால் இந்தத் தடைகளிலிருந்து நான் கற்றுக் கொண்ட ஒன்று. எத்தனை பெரிதான பிரச்சினைகளைச் சந்திக்கிறேனே அத்தனை பெரிதான தீர்வை நான் கண்டறிகிறேன். எத்தனை சிறிதான பிரச்சினையை எதிர்கொள்கிறேனோ அதே அளவிலான வெளியேறும் வழியை நான் கண்டுகொள்கிறேன். மொத்தத்தில் பிரச்சினை களின் மூலமாக புதிய பரிமாணங்களை எட்டுகிறேன்.

**உங்களுக்குள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய மனிதர்?**

எனக்குள் தாக்கம் ஏற்படுத்தியவர் மனிதர் என்று கூறுவதைவிட, என் குரு எனக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார் என்று சொல்லலாம். ஏனென்றால் என் குரு ஒவ்வொரு நிமிடமும் என் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போவது போல் உணர்கிறேன். பிப்ரவரி 2005, ஈஷா வகுப்புகள் செய்தேன். அதைச் செய்தபோதும் எனக்கு பெரும் மாற்றம் ஏற்படவில்லை. அதைத் தொடர்ந்து பல வகுப்புகள் செய்தேன். சம்யமா என்ற உயர்நிலை வகுப்பு செய்தேன். சத்குரு அவர்களைச் சந்திக்கிற வாய்ப்பு கிடைத்தது. பலதும் நிகழ்ந்து வந்த வேளையில். ஆன்மீகம் என்றால் என்ன என்ற தெளிவு மட்டும் இருந்தே அன்றி வேறு எந்த மாற்றமும் என்னுள் இல்லை. ஈஷாவின் உயர்நிலை வகுப்பான சம்யமா வகுப்பை இரண்டாம் முறையாகச் செய்தேன். அப்போது அதில் பங்கு பெற்ற ஒவ்வொருவரும் ஒவ்வொரு தன்மையில் இருக்கிறார்கள். பலர் அவர்கள் சக்தி நிலையின் உச்சத்தில் இருக்கிறார்கள். சத்குரு சம்யமா தீட்சையளிக்கிற வேளை நான் முதல் வரிசையில அமர்ந்திருக்கிறேன். எனக்குள் அமைதி பெருகுவதை உணர முடிகிறது. அப்போது சத்குரு கண்களில் கண்ணீர் வடிந்து கொண்டேயிருப்பதை பார்க்க முடிகிறது. கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரமிருக்கும. கண்ணீர் வடிந்துகொண்டே யிருக்கிறது. துணியால் துடைத்துக்கொண்டே யிருக்கிறார். என்னை உலுக்கிப் போட்டது இந்தக் காட்சி. சுயநலமிகுந்த உலகம். இதில் நாம் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக அவர் ஆனந்தக் கண்ணீர் விட வேண்டிய அவசியம் என்ன? நமக்கு தீட்சை வழங்கி, நாம் சுகமாக இருப்பதைப் பார்க்க விரும்பி ஆனந்தக் கண்ணீர் விடுகிறாரோ என்று அந்தக் காட்சி என்னைப் பெரிதும் பாதித்தது. நான் நன்றாக இருக்க வேண்டும். அவர் கண்ணீர் விட என்ன அவசியம் இருக்கிறது. ஆனாலும் அந்தக் ஆனந்தக் கண்ணீர் விட்டார். அது என் செயற் பாடுகளுக்கு இன்றும் என்றும் உயிர் கொடுக்கும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய நிகழ்வு.

அதே போல் எனக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய புத்தகம் எது என்று கேட்டீர்கள். எனக்குப் புத்தகம் வாசிக்கும் பழக்கம் இருந்ததில்லை. ஆனால் நிறைய திரைப்படங்கள் பார்ப்பேன். இதைக்கூட என் அம்மாவிடம்தான் கற்றுக்கொண்டேன். என் அம்மா நிறைய திரைப் படங்கள் பார்ப்பார். ஒரு காட்சி ஓடிக்கொண்டே யிருக்கும்போதே திரைக்கதை அமைப்பவர் போல் அடுத்த காட்சியைச் சரியாக யூகிப்பார். நான் முதன் முதலில் ஒரு பெண்ணை டாக்டருக்குப் படிக்க உதவிய சமயத்தில் சாமுராய் என்ற திரைப்படம் வந்திருந்தது. அதில் கதாநாயகி மருத்துவம் படிப்பாள். அங்கு ஊழல் நடக்கும். கதா நாயகி கதாநாயகனை தட்டிக்கேட்கக் கட்டாயப் படுத்துவாள். என் சொந்தமாக இருந்தால் கேட்பேன் என்று நாயகன் சொல்லவும். உன் காதலியான நான் சாகிறேன்; கேள் என தற்கொலை செய்துகொள்வாள். இது அப்படத்தின் கரு. ஒரு வேளை இந்தத் திரைப்படங்கள் கொடுத்த உந்துதல் எல்லாம் சேர்த்துதான் அன்று அந்த வறுமையிலும் பிறருக்கு எதையாவது செய்ய வேண்டும் என்ற

*உந்துதலை தந்ததோ என்னவோ? ரமணா, லகான், ஸ்டாலின் என எனக்குள் விதை தூவிப்போன திரைப்படங்கள் பல.*

**புரவலர்களாக, உங்களுக்கு உதவுபவர்களாக, உச்சம் தொட்ட மனிதர்கள் பலர் உங்களுடன் பயணிக் கிறார்கள். ஒரு சாமான்ய மனிதனாக இருந்து இது எப்படி சாத்தியப்பட்டது?**

*நம்பிக்கை வேண்டும். இந்த நம்பிக்கை ஒரே நாளில் சாத்தியப்படாது. தவம் கிடக்க வேண்டிய சூழலும் வரும். அவர்கள் சொல்கிற வசைகள், கிண்டல்கள் என அனைத்தையும் சகித்துக் கொள்கிற மனப்பான்மை வேண்டும். ஒவ்வொரு முறை புரவலர்களைக் கண்டுபிடிக்க கால்கடுக்க நடந்திருக்கிறேன். ஒருவரைச் சந்திக்க நூறு நாட்கள் கூட நடந்திருக்கிறேன். காலை ஐந்து மணி முதல் இரவு எட்டு மணி வரை வீட்டின் வாயில் கதவு முன் தவம் கிடந்திருக்கிறேன். 'உன்னோடு எப்போதும் இதே ராமாயணம்தானா?' எனச் சலித்துக் கொண்டிருக்கிறார்கள். 'ஏதாவது உதவி செய்யுங்கள் என்று அன்னை தெரசா கேட்ட போது ஒரு கையில் எச்சிலை உமிழ்ந்தாராம் தொழிலதிபர் ஒருவர். இதை எனக்குக் கொடுத்தீர்கள். என்னை நம்பி இருப்பவருக்கு ஏதாவது கொடுங்கள் என மறுகையை நீட்டினாராம்' அந்தளவுக்கு இல்லாவிட்டாலும் என்னை என்னால் முடிந்தளவு வருத்தியேனும் புரவலரை அடைந்துவிடுவேன். அதன் மூலம் ஒரு மாணவன் அல்லது மாணவி படிக்க நேர்ந்தால் அது எனக்குக் கிடைத்த வெற்றி. அந்த வெற்றி எனக்குள் ஓர் இனம் புரியாத சுயநம்பிக்கையை ஏற்படுத்தும்.*

*நம்பிக்கை என்பதுகூட சமயங்களில் பிறரால் ஏற்படக்கூடும். ஆனால் சுய நம்பிக்கை என்பது எப்போது நாம் நம்மை வருத்தி, பல போராட்டங்கள் கடந்து ஒரு வெற்றியை அடைகிறோமோ அப்போது ஏற்படுவது. இது வெளிப்புறத்தில் கிடைக்காத ஒன்று. ஆக ஒரு வெற்றிக்குப்பின் மற்றொன்று என சுய நம்பிக்கையைத் தேடிப்பிடிக்க ஆரம்பித்தேன். பல புரவலர்களைச் சந்திக்க நான் சிரமப்பட்டாலும் சில புரவலர்கள் என் முயற்சியைப் பாராட்டி உடனே முன்வந்ததும் எனக்கு ஊக்கமாய் இருந்தது.*

*தொடர் முயற்சி, புரவலர்களை சந்திக்கிற போது அவர்களை நல்ல தன்மையில் சந்திக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு சத்குருவின் புத்தகங்களை, சிடிக்களை வழங்குவேன். இது ஒரு சுமூகமான சூழலை ஏற்படுத்திக்கொடுக்கும். இன்று முகவரியின் மூலம் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயில்கிறார்கள். நான் எங்கோ ஒரு துளியாக ஆரம்பித்தது. இன்று நான் திரும்பி பார்க்கிறபோது எனக்கே வியப்பாகயிருக்கிறது என்றால் காரணம், வெளிப்படையான தன்மை, நேர்மை மிக முக்கியமாக நன்றியுணர்வு. இயக்குனர் முருகதாஸ், மேயர் சைதை துரைசாமி, எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தின் தாளாளர் டாக்டர் டி.ஆர். பச்சைமுத்து, சூரியன் பார்மசூட்டிகல்ஸ் எம்.டி. ஆர்.கிருஷ்ணமூர்த்தி, பாலாஜி ரப்பர் நிறுவனத்தின் தலைவர் வைத்தியலிங்கம் இன்னும் நீண்டு கொண்டே போகும் நாங்கள் நன்றி சொல்ல வேண்டியவர்களின் பட்டியல். முகவரியின் அடி நாதமே நன்றியுணர்வுதான். இதற்குப்பின் எந்தத் திட்டமிடலும் இல்லை. எனக்கு எந்தப் பின்புலமும் இல்லை. நான் கடைப்பிடிக்கிற ஒரே விஷயம் வெளிப்படையாக இருப்பது, நேர்மையாக இருப்பது, நன்றியுடன் இருப்பது மட்டும் தான்.*

**வருங்காலக் கனவு?**

*மாமர விதையை நட்டுவைத்தால் அதன் பழத்தை நீங்கள் உண்ண வேண்டும் என்று நினைக்காதீர்கள். உங்களுக்குப் பின்னால் தலை முறைகளுக்குச் சேரவேண்டும் என்று கருதுங்கள் என்று சற்குரு சொல்வார். ஆக என் கனவு என்பது நிகழ்காலத்திற்கான கனவு மட்டுமல்ல. அப்படி யிருந்தால் அது கனவேயல்ல. கனவு பெரிதாக இருந்தால்தான் தலைமுறைகள் தாண்டியும் அதன் பலன் சென்றடையும். இன்று முகவரியின் மூலம் பயின்ற மாணவர்கள் இன்று நல்ல நிலைமையில் உள்ளனர். அப்படி படித்து வெளியேறிய மாணவர்கள் மீண்டும் முகவரிக்குத் திரும்ப வேண்டும். அவர்களின் ஈட்டும் வருமானத்தில் ஒரு பிடியை முகவரிக்குக் கொடுத்து அவர்களுக்கு கிடைத்தது போல பிற மாணவர்களுக்கு உதவிகள் கிடைக்கச் செய்ய வேண்டும். இது ஒரு சங்கிலித் தொடர் போல் வளர வேண்டும் என்பது என் கனவு. நமக்கான புரவலர்கள் இருக்கிறார்கள்; ஆனாலும் புரவலர்களைச் சார்ந்தே இது போன்ற இயக்கங்கள் இருக்கும் நிலை மாற வேண்டும். மாணவர்கள் மற்ற மாணவர்களை உருவாக்க வேண்டும்.*

*இதைக் கருத்தாக்கமாகக் கொண்டு வானவில் என்ற அமைப்பை முகவரி மாணவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். இது முகவரி மூலம் படித்து இன்று நல்ல நிலையில் இருக்கிற மாணவர்களால் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. மேலும் முகவரி மூலம் வெளியே வர இருக்கிற மாணவர்கள் இதில் ஒரு அங்கமாக இணைந்து வருங்கால முகவரி மாணவர்களுக்கு உதவ வேண்டும். வானவில் என்ற அமைப்பை உருவாக்கிய ரகுபதி, பூபதிராஜா, வெற்றிவேல், கார்த்திகேயன், வினோத்குமார், விக்னேஷ்குமார், துர்கா ஆகிய ஏழு மாணவர்களுக்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். இவர்கள் முகவரி மூலம் படித்து வெளியேறி மீண்டும் முகவரிக்குத் திரும்பி என் கனவுக்கு உயிர் கொடுத்த எழுவர். இன்று ஏழு பேராக இருக்கும் இந்த அமைப்பு. எழுபதாக வேண்டும். இந்த எழுபது எழுநூறாக வேண்டும். இப்படிப் படிப்படியாக மென்மேலும் வளர வேண்டும் என்பதுதான் என் கனவு.*

*ராமர் என்று பெயரிடப்பட்ட நான், என் அக்காவால் ரமேஷ் ஆனேன். பின்பு இந்த அமைப்புக்கு முகவரி என்று பெயரிட்டபோது 'பாலம்' கல்யாணசுந்தரம் அய்யா பெரிதும் மகிழ்ந்து என்னை முதன் முதலில் 'முகவரி ரமேஷ்' என்று அழைத்தார். அதுவே இன்றுவரை நிலைத்து விட்டது. இனி வரும் காலங்களில் ரமேஷ் என்ற பெயர் உதிர்ந்து, முகவரி என்று பெயர் மட்டுமே நிலைத்து அதன் மூலம் பல்லாயிரக்கணக்கான மனிதநேயம் மிக்க மாணவர்கள் உருவாக வேண்டும்.*

*என்று தலைமுறைகள் கடந்த கனவுகளை சொல்லி முடித்தார், 'முகவரி ரமேஷ்.' அவர் கனவு கைகூட நம் நல்வாழ்த்துகள்.*